Tamil murasu 2 July 07

உதவிகள் பலவிதம்

# கண்ணைக் கட்டி நடந்த துணைப் பிரதமர்



பார்வையற்ற பிள்ளைகள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ளச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த விளையாட்டில் பேராசிரியர் எஸ் ஜயகுமாரும் மாணவர் சிவாவுடன் பங்கேற்றார்.

லெட்சுமி லெட்சுமணன்

இளையர் தினத்தை முன்னிட்டு இளையர்களும் பெரியவர்களுமாகச் சுமார் 11,000 பேர் ஒன்று சேர்ந்து நெடுந்தொலைவு ஓட்டப் போட்டியில் பங்கேற்றனர். சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஓட்டம், ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி நல்ல காரியத்திற்கு உதவும் வகையிலும் அமைந்தது.

சிட்டி - மில்க் ரன் என்றழைக்கப்பட்ட இந்நிகழ்ச்சி வழி திரட்டப்படும் நிதி வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகளுக்கும் தவறான பாதையில் செல்ல அதிக வாய்ப்பிருக்கும் பிள்ளைகளுக்கும் நன்கொடையாகத் தரப்பட்டது.

"எங்கள் இலக்கு $1 மில்லியன் வெள்ளியாகத்தான் இருந்தது. ஆனால் இதுவரை $1.1 மில்லியன் திரண்டிருக்கிறது. இத்தொகை கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் பல மடங்கு அதிகம்" என்று சிட்டி மில்க் ரன் 2007-ன் ஏற்பாட்டுக் குழுவின் தொண்டூழியத் தலைவர் திரு லீ லுங் நியன் தெரிவித்தார்.

கடந்த 7 ஆண்டுகளாக இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு நிகழ்ச்சியை சிட்டி, பிஎஸ்ஏ சிங்கப்பூர் முனையம் ஆகியவற்றின் ஆதரவுடன் மில்க் (Mainly I Love Children), பியாண்ட் சோசியல் சர்விஸ் ஆகிய சமூக நல அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட துணை பிரதமரும் சட்ட அமைச்சருமான பேராசிரியர் எஸ் ஜய குமார் சிஇஓ தொடர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார்.

நிதி திரட்ட ஏற்பாடான நிகழ்ச்சியில் தம்மால் ஆன உதவியாக நொறுக்குத் தீனி விற்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் 44 வயது திரு நாகேந்திரன். எப்படியும் $500 முதல் $600 வரை நிதி திரட்டி உதவ வேண்டும் என்பது எனது எண்ணம் என்றார் அவர். அவரது முயற்சியில் உறுதுணையாக உடன் இருந்தார் 14 வயது சுகன்.